.செ.வெ.எண்:42 நாள்:25.02.2017

# அரியலூரில் வறட்சி மற்றும் குடிநீர் குறித்து அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், **வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கண்கிடுவதற்கும், நிவாரணம் வழங்கவும் மற்றும் கோடைக்கால குடிநீர் விநியோகம் குறித்தும் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம்** மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (25.02.2017) நடைபெற்றது.

**இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கணக்கிடும் பணி, நிவாரணம் வழங்குதல் மற்றும் பயிர் காப்பீடு தொடர்பாக அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும், அரியலூர் மாவட்ட கூட்டுறவுத்துறையின் மூலம் வங்கிகளிலிருந்து விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்குவது தொடர்பாகவும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், வருகின்ற கோடைக்காலத்தை முன்னிட்டு நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மற்றும் குக்கிராமங்களிலுள்ள மக்களுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் மேற்கொள்ள அனைத்துத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. குடிநீர் விநியோகத்தை சீராக மேற்கொள்ள மோட்டார் பம்புகள், நீரேற்று நிலையங்களிலுள்ள இயந்திரங்கள் மற்றும் இதர உபகரணங்களை தயார் நிலையில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், பழுதடைந்துள்ள உபகரங்களை உடனே சரிசெய்து மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் குடிநீர் நீர்தேக்கத் தொட்டிகள், நீர் சேகரிப்பு நிலையங்களை முறையாக பராமரிக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அனைத்து குடிநீர் நீர்தேக்கத் தொட்டிகளிலும் சரியான அளவு குளோரின் பயன்படுத்தி தூய்மைப்படுத்தப்பட்ட குடிநீர் வழங்க அறிவுருத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி.பத்மஜாதேவி, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரெங்கராஜன், இணை இயக்குநர் மருத்துவத்துறை அலுவலர் மற்றும் அனைத்துத் துறை மாவட்ட அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.